ISSN:2582-9599



# இராமச்சந்திரகவிராயரின் விலாச நாடகங்கள்

**முனைவர் நா. ரேணுகா**
**உதவிப் பேராசிரியர்**
**தமிழ் உயராய்வு மையம்**
**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை**

25

**ஆய்வுச்சுருக்கம்**

முத்தமிழாக விளங்கிய தமிழ் இன்று இயல் தமிழாக மட்டும் திகழ்கிறது. நாடகத்தமிழ் குறித்த ஆய்வுகள் முன்னெடுக்க வேண்டிய சூழலில் உள்ளோம். தெருக்கூத்துக்களையும் உள்ளடக்கிய நாடகஆய்வுகள் வெளிவரவேண்டும். தெருக்கூத்துகளுக்குக் கதைக்களன்களாக விளங்கிய புராண, இதிகாச கதைகளே, மேடை நாடகங்களுக்குரிய கதைக்களன்களாகவும் விளங்கின. கவிதை நாடகங்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

முத்தமிழில் வல்லவரான இராமச்சந்திரகவிராயர் விலாச நாடகங்கள் பலவற்றை இயற்றி, வெளியிட்டார். இவரது நாடகக் கருப்பொருளானது இதிகாச, புராணக் கதைகளிலிருந்து பெறப்பட்டவை. சகுந்தலை விலாசம், ஸ்ரீமகாபாரத விலாசம் வில் வளைத்து மாலையிடுதல், திரௌபதை துகிலுரிதல் முதலான விலாச நாடகங்களை இயற்றினார். இவரது நாடகங்கள் பிற்காலத்தில் மேலும் பல நாடகங்கள் உருக்கொள்வதற்குத் துணைநின்றன.

தெருக்கூத்து வடிவமான விலாச நாடகங்களில் மிகுதியும் பேசப்பட்ட திரௌபதை துகிலுரிதல் நிகழ்வு, பின்னாளில் பாரதியாரால் பாஞ்சாலிசபதமாக உருக்கொண்டது. இராமசந்திரகவிராயரின் ஸ்ரீமகாபாரதவிலாசம் சூது துகிலுரிதல் விலாசத்தில் காட்சிப்படுத்திய திரௌபதையை – பாரதியாரின் பாஞ்சாலிசபதத்தில் காணமுடிகிறது. இவ்வாறாக, இராமச்சந்திர கவிராயர் விலாச நாடகங்கள் பலவற்றை இயற்றி, தமிழ் நாடக வளர்ச்சிக்குத் துணைநின்ற விதத்தை இவ்வாய்வுக் கட்டுரை எடுத்துரைக்கிறது.

**திறவுச்சொற்கள்**

விலாச நாடகங்கள், இராமச்சந்திரகவிராயர், சகுந்தலை விலாசம், திரௌபதை துகிலுரிதல், ஸ்ரீமகாபாரத விலாசம் வில் வளைத்து மாலையிடுதல், பாரதியார் பாஞ்சாலி சபதம்

**முன்னுரை**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் செல்வாக்குப் பெற்ற விலாச நாடகங்களை இயற்றுவதில் வல்லவராக விளங்கியவர் இராமச்சந்திரகவிராயர். தொடக்க கால நிகழ்த்துக்கலையின் நீட்சியாக விளங்கிய விலாச வடிவத்தைச் சிறப்பாகக் கையாண்டு, மகாபாரத நிகழ்வுகளை இசைக்கூத்து வடிவில் வழங்கிய பெருமைக்குரியவர். இயலிசை நாடகமென்னும் முத்தமிழ் வித்தகராகத் திகழ்ந்தவர். சகுந்தலை விலாசம், மகாபாரத விலாசமாகிய சூது-துகிலுரிதல், தாருகாவிலாசம், வில்வளைத்து மாலையிடுதல், அர்ச்சுனன் தபசு, நச்சுப்பொய்கை, இரங்கூன் சண்டை நாடகம், இரணிய வாசகப்பா ஆகிய விலாச நூல்களை இயற்றியவர். சென்னைக் கல்விச் சங்கத்தின் தமிழ்ப் புலவர்; தாண்டவராய முதலியாருடன் இணைந்து வீரமாமுனிவரின் சதுரகராதியை அச்சிடல்

எனத் தமிழ்ப்பணி புரிந்தவர். கல்வியறிவும் பிறமொழி அறிவும் பெற்ற இவரின் படைப்பில் வெளிவந்த விலாசங்கள் மக்களின் செல்வாக்கைப் பெற்றன. இத்தகு சிறப்புப்பெற்ற இவரது விலாச நூல்களுள் சில இன்று கிடைக்கவில்லை என்பது வருத்தத்திற்குரியது. இராமச்சந்திர கவிராயரின் விலாச நாடகங்களை முதன்மையாக இவ்வாய்வு மேற்கொள்கிறது.

புதுக்கவிதைக்கு வித்திட்ட பாரதியாரின் முப்பெரும் படைப்புகளுள் ஒன்று பாஞ்சாலிசபதம். தெருக்கூத்தில் நிகழ்த்தப்பட்ட பாஞ்சாலி கதையைக் கண்டு வளர்ந்த பாரதியார் பாஞ்சாலியைக் குறியீடாக வைத்து, விடுதலை உணர்வைத் தூண்டும் வகையில் பாஞ்சாலி சபதத்தை இயற்றினார். காலந்தோறும் சொல்லப்பட்டு வரும் பாஞ்சாலி கதையை இவ்விருவரும் கையாண்டவிதம், தமக்காக மாற்றிக்கொண்ட திறம் முதலானவற்றையும் இவ்வாய்வுக்கட்டுரை ஆராய்கிறது.

**சகுந்தலை விலாசம்**

காளிதாசரின் சகுந்தலை கதையைப் பின்பற்றாமல் மகாபாரத்தில் வரும் சகுந்தலை கதையை மையமாகக் கொண்டு சகுந்தலை விலாச நாடகத்தை எழுதினார். இந்நூல் இசை நாடக வடிவில் அமைந்த படைப்பு. கையெழுத்துப் பிரதியாக எழுதப்பட்ட இந்நூல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அச்சு வடிவம் பெற்றது.

**ஸ்ரீ மகாபாரத விலாசம்**

மகாபாரத்தின் கதையை நான்கு நிலைகளாகப் பகுத்து நாடகமாக்கியுள்ளார். தருமனுக்குப் பட்டம் சூட்டுதலில் தொடங்குகிறது. பீமன் – இடும்பி திருமணம் வரை கதை நீள்கிறது.

**ஸ்ரீ மகாபாரத விலாசம் : சூது-துகிலுரிதல்**

இந்நாடகத்தில் விசயன் வில் வளைத்து திரௌபதையை மணந்த செய்தியை எடுத்துரைக்கிறது. இராகத்துடன் பாடக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

**ஸ்ரீ மகாபாரத விலாசம் : சூது-துகிலுரிதல்**

மகாபாரதத்தில் வரும் சூது, துகிலுரிதல் எனும் நிகழ்வுகளை மையமாகக் கொண்டு கூத்து வடிவில் - விலாசமாக இராமச்சந்திரகவிராயர் எழுதியதே ஸ்ரீ மகாபாரத விலாசம் : சூது-துகிலுரிதல். இந்நூல் 1862இல் அச்சுருப்பெற்று மக்களிடம் பரவத் தொடங்கியது.

பாண்டவர்கள் சூதாடுதலும், திரௌபதையின் துகிலுரிதலும் திரௌபதை சபதம் செய்தலும் இக்கதையின் மையக்கருத்தாக விளங்குகிறது.

**நாடகக் கூறுகள்**

பழந்தமிழ் இலக்கிய மரபையொட்டி காப்பு, போற்றிப் பாடல், அவையடக்கப்பாடல் முதலியவையும் சாற்றுக்கவி, தெய்வ வணக்கம், மங்களம் அமைய நூலைய யாத்துள்ளார். இவற்றுடன் இசை சார்ந்த நாடகக் கூறுகளான இராகம், தாளப் பகுப்புடைய தரு, திபிதை முதலாவை அமைய எழுதியுள்ளார். பத்தியம், ரூபகம், பத்தியம், தாலாட்டு போன்றவையும் இடம்பெற்றுள்ளன. உரைநடையில் “வசனம்” என்ற பகுதி உள்ளது. ”பொதுவசனம்” என்ற பகுதி நாடகக்கதையின் செயல்பாட்டை, போக்கை உணர்ந்து கொள்ளத் துணைபுரிகிறது.

மேலும் இராமச்சந்திர கவிராயர் அவர்கள்,

“ஓதுமகாபாரதத்தி லுள்ளபடி நாடகமாய்ச்

சூதுதுகிலுரியுஞ் சொல்லவே” (இராமச்சந்திர கவிராயர், 1884:ப.3)

என்றும்

“நானிலந்தனிலிந்த நாடகம்பாடவென்

னாவிலிருந்துநீ நன்மைதரவேணும்” (இராமச்சந்திர கவிராயர், 1884:ப.4)

என்றும் தம்நூலில் குறிப்பிடுவதிலிருந்து மக்கள் விரும்பும் கதைகளை நாடகமாக்கித் தந்துள்ளார் என்பது பெறப்படுகிறது.

இவரது விலாச நாடகங்கள் பழமைக்கும் புதுமைக்கும் இடைப்பட்ட நாடக வடிவத்தைக் கொண்டவை. முழுவதும் பாடல்களாக அமைக்காமல் இடையிடையே வசனங்கள் அமைய நாடகமாக்கிய விதம் சிறப்பிற்குரியது. நாட்டார் வடிவத்தையொட்டி, கட்டியங்காரன் வருகை, விநாயகர் வருகை, அரசன் கொலுவிருக்கின்ற விதம் முதலியவை இடம்பெற்றுள்ளன. பொதுவசனம், சொல்வசனம், வசனம் முதலிய வசன வகைகள் உள்ளன. சகுந்தலை விலாசத்தில் வருகின்ற பொதுவசனம், “அகோதெப்படி யென்றால்” எனத் தொடங்குவது எண்ணத்தக்கது.

**பாஞ்சாலி – பாத்திரப்படைப்பு**

துரியோதனனின் கோபத்திற்கும் அவமானத்திற்கும் காரணமாய் விளங்குபவள் பாஞ்சாலி; துரியோதனனின் சூழ்ச்சியால் மிகுதியும் துன்பமும் அவமானமும் அடைந்தவள் பாஞ்சாலி. இவ்வாறு எல்லாவற்றிற்கும் காரணமாய் பாஞ்சாலி விளங்குகிறாள். கதையின் நகர்தலுக்கும் முடிவுக்கும் இட்டுச் செல்லும் கதையின் முதன்மை பாத்திரம் பாஞ்சாலி; கற்பில் சிறந்தவள் எனச் சான்றோரால் போற்றப்படும் பாத்திரம்; தனக்கு மான இழப்பு ஏற்படும் சூழலில் எதிர்த்துப் போராடும் பாத்திரம்; சபதமுரைத்து தன்மானத்தைக் காக்கும் பாத்திரம் எனத் தன்னளவில் உயர்ந்த பாத்திரமாக விளங்குகிறாள்.

**சபதம் உரைத்தல்**

தமக்கு அநீதி நிகழும்போது தம் கோபத்தின் வெளிப்பாடாக சபதம் உரைக்கும் போக்கு மக்களிடையே உண்டு. சிறந்தோர், சான்றோர் உரைக்கும் சபதம் நிறைவேறுவதைக் காணமுடிகிறது. நாடகத்தில் சபதம் உரைக்கும் காட்சி நாடகத்திற்குச் சுவைப் பயப்பதாய் அமைகிறது; காண்போரின் கவனத்தை ஈர்த்து விறுவிறுப்பைக் கூட்டுகிறது. இராமச்சந்திரகவிராயர் தம் நூலில் சபதம் உரைக்கும் காட்சியைத் திறம்பட அமைத்துள்ளார். உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் மொழிநடையை அமைத்துள்ளார். பெண்மையின் சிறப்பு, கற்பின் வலிமை, வீரவுணர்வு ஆகியவற்றை உணர்த்தும் வகையில் இக்காட்சிகள் அமைந்துள்ளன.

ஸ்ரீமகாபாரத விலாசம் சூது துகிலுரிதல் நாடகத்தில் பாண்டவர்கள் திரௌபதையைப் பணயமாக வைத்துச் சூதாடி இழக்கின்றனர். இதன் விளைவாக துச்சாதனன் திரௌபதையின் துகிலை அவையோர் முன்னிலையில் உரிக்கிறான். துகிலுரித்ததால் திரௌபதை கோபம் கொள்கிறாள். தன் நிலைக்கு யாரும் உதவ முன்வராததால் பொங்கி எழுகிறாள். அவமானமும் கோபமும் ஒன்றிணைந்து சபதமுரைக்கிறாள். வீறுகொண்டு எழுந்த திரௌபதையை அடுத்து பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் எனத் தருமரைத் தவிர்த்து மற்ற நால்வரும் சபதம் உரைக்கின்றனர். இந்நிலைக்கு உள்ளாக்கிய அனைவரையும் அழிப்பதாகச் சபதம் எடுக்கின்றனர்.

கிருஷ்ணனின் அருளால் திரௌபதையின் துகில் வளர்ந்து வருகின்ற நிலையில் சபையிலுள்ளோர் திரௌபதையைப் போற்றுகின்றனர். அதன் பின்னரும் துரியோதனனின் ஆணவம் அடங்காமல் திரௌபதையைத் தன் தொடைமேல் உட்கார வைக்குமாறு துச்சாதனனுக்கு ஆணையிடுகிறான். துரியோதனனின் செயலைத் தடுக்கும் நோக்கில், 'கற்புடையோர் சபித்தால் தீர்க்க ஆதி மும்மூர்த்திகளாலாகாது' என்று விகர்னன் கூறுகிறான். இச்சொல் தீய எண்ணத்தில் ஆழ்ந்த துரியோதனன் செவியில் விழுந்தாலும் சிந்தனையில் விழவில்லை. 'என்னை-சபதத்துடன் அழைத்துப் புகழ்பெற்றிட ஜெயிப்பாரடி போடி' என ஏளனத்துடன் திரௌபதையை இகழ்கிறான்.

இச்சூழலில் திரௌபதை சபையிலுள்ளோரை நோக்கி, 'என்னை இந்த இராஜசபையிலே நிறுத்தி என் கூந்தலையுந் துகிலையுந் தீண்டி என்னை அவமானபங்கஞ் செய்தவனை நாளை இரணக்களத்தில் அவன் மார்பின் மேலிருந்து மயிரை முடிக்காவிட்டால் நான் துரோபதையல்ல' எனச் சபதம் செய்கிறாள்.

திரௌபதையின் நிலைக்காக வெட்கி, வருந்தி, வெகுண்ட பீமன், இந்நிலைக்கு ஆளாக்கி மானபங்கம் செய்தவரைக் கையிலிருந்கும் கெதையினால் அடித்துக் கொல்வேன் என்றும், துகிலுரித்து அவமானப்படுத்தியவனின் நெஞ்சைப் பிளந்து அவனது உதிரத்தைக் குடிப்பேன் என்றும் சபதம் செய்கிறான். இச்சபதத்தை நிறைவேற்றும் வரை 'என் கையினால் ஜலத்தையள்ளி தாகம் தணிக்க மாட்டேன். அப்படியே பருகவேண்டுமென்றாலும் கெதையினால் ஜலத்தை அடித்து மேலே எழும் ஜலத்தையே சாப்பிடுவேன்' என உறுதி ஏற்கிறான்.

துரியோதனனுக்குத் துணை நின்ற கர்ணன் உயிரை எடுப்பேன் என அருச்சுனனும், கவடுவஞ்சம் நிறைந்த சவுபல் நாதனைக் கொல்வேன் என நகுலனும், சகுனியைக் கொல்வேன் எனச் சகாதேவனும் சபதம் செய்கின்றனர்.

இவ்வாறு ஒவ்வொருவரும் செய்த சபதங்களைக் கேட்டு சபையிலுள்ள பெரியோர்கள் அஞ்சினர். திருதராட்டினன் பயந்து திரௌபதையிடம் மன்றாடுகிறான். திரௌபதையைப் புகழ்கிறான். தன் மகனுக்காகப் போராடுகிறான்.

பாரதியாரின் பாஞ்சாலி சபதத்திலும் சபதம் உரைக்கும் பகுதி பெரும் பங்கு வகிக்கிறது. எல்லோரும் சபதம் உரைத்தபின் நிறைவாக, முத்தாய்ப்பாக பாஞ்சாலி சபதம் உரைக்கிறாள். அத்துடன் கவிதை நிறைவு பெறுகிறது. கவிராயர் விரிவாகப் பேசிய கதையைச் சுருக்கமாக பாரதியார் காட்டுகிறார். திருதராட்டினன் பண்புநலன் வேறுபட பாரதியார் அமைத்துள்ளார். இருப்பினும், இருநூல்களிலும் திரௌபதையின் கற்பு முன்னிலைப்படுத்தப்படுகிறது. திரௌபதையைச் சபையோரும், பின்னர் திருதராட்டினரும் போற்றுகின்றனர். திரௌபதையின் தன்மான உணர்வே சபதத்திற்குக் காரணமாகிறது.

**ஸ்ரீமகாபாரத விலாசமும் பாஞ்சாலி சபதமும்**

இராமச்சந்திரகவிராயரின் ஸ்ரீமகாபாரத விலாசமும் பாரதியின் பாஞ்சாலிசபதமும் ஒரே பொருண்மையைக் கொண்டவை. சிற்சில இடங்களில் இருவரும் வேறுபடுகின்றனர்.

- இராமச்சந்திர கவிராயர், துரியோதனனின் பொறாமையையும் அவமானத்தையும் அதிகமாகப் பேசுகிறார். பாரதியார், துரியோதனனின் பொறாமைக்கே முக்கியத்துவம் தருகிறார்.

- ஸ்ரீ மகாபாரத விலாசத்தில் வரும் திருதராட்டினன் தீயசிந்தனை கொண்டவனாக, பிள்ளையைப் போலவே சிந்திப்பவனாக வருகிறார். மகனின் சதியைக் கேட்டவுடன், 'கண்கள் வந்தாற் போற்' உள்ளது என மகிழ்கிறார். சகுனியைப் போற்றுகிறார். ஆனால் பாஞ்சாலிசபதத்தில் திருதராட்டினன் நல்லசிந்தை கொண்டவனாக வருகிறார். மகனின் சதியைக் கேட்டு வருந்துகிறார். மகனுக்கு அறிவுரை வழங்குகிறார். சகுனியைத் தூற்றுகிறார்.
- திரௌபதையின் துகில் வளர்ந்து மானம் காக்கப்பட்டபின் திரௌபதையும் துரியோதனனும் தர்க்கம் (வாதம்) செய்கின்றனர். ஸ்ரீ மகாபாராத விலாசத்தில் இடம்பெற்ற இக்காட்சி, பாஞ்சாலி சபதத்தில் இடம்பெறவில்லை.
- ஸ்ரீ மகாபாரதவிலாசத்தில் திரௌபதையே முதலில் சபதம் செய்கிறாள். பின்னரே பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என ஒவ்வொருவராகச் சபதம் செய்கின்றனர். ஆனால் பாஞ்சாலி சபதத்தில் வீமன், அருச்சுனனை அடுத்து இறுதியாகவே பாஞ்சாலி சபதமுரைக்கிறாள். நகுலன், சகாதேவன் சபதமுரைத்ததாகக் காட்டவில்லை.
- ஸ்ரீ மகாபாரதவிலாசத்தில், திரௌபதை சபதமுரைத்த பின் திருதராட்டினர் திரௌபதைக்கு இருவரங்களைக் கொடுக்கிறார். அவ்வரங்களைக் கொண்டு பஞ்சபாண்டவர்களின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கிறாள் திரௌபதை. மீண்டுமொரு முறை பாண்டவர்கள் சகுனியுடன் சூதாடுகின்றனர். தருமர் வெற்றி பெறுகிறார். பின்னரே வனம் செல்கின்றனர். இச்செய்தி ஏதும் பாஞ்சாலிசபதத்தில் இடம்பெறவில்லை.
- ஸ்ரீ மகாபாரத விலாசம், பாண்டவர்கள் நாடாளும் காட்சியுடன் நாடகம் நிறைவு பெறுகிறது. பாஞ்சாலிசபதம், திரௌபதை சபதமுரைத்ததோடு நிறைவு பெறுகிறது.

கவிராயரின் ஸ்ரீ மகாபாரத விலாசம் சூது – துகிலுரிதல் நூல்,

"பிற்காலத்தில் "பாஞ்சாலி சபதம்" நூலை ஆக்கிய பாரதியார் இந்நூலையே முதல் நூலாகக் கொண்டுள்ளார் என அறியமுடிகிறது." (முனைவர் திருமதி ச. சிதம்பரம், 2006:262)

பாரதியாரின் பாஞ்சாலி சபதத்திற்கு முதல் நூலாக விளங்கியது என முனைவர் திருமதி ச. சிதம்பரம் கூறுவது நோக்கத்தக்கது. சிற்சில மாற்றங்களுடன் பாரதியாரின் பாஞ்சாலி சபதம் அமைந்துள்ள பாங்கை இப்பகுதி எடுத்துரைத்துள்ளது.

**தொகுப்புரை**

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் நாடக வளர்ச்சிக்குப் பெரும்தொண்டாற்றியவராக இராயநல்லூர் இராமச்சந்திர கவிராயர் விளங்கினார்.
- மக்களிடம் செல்வாக்குப் பெற்ற இதிகாச, புராணக் கதைகளையே தம் நாடகத்திற்குரிய களங்களாக எடுத்துக்கொண்டு, விலாச நாடகங்களைப் படைத்தருளினார் என்பது இவரது நாடகங்களின் வழி அறிய முடிகிறது.
- பழமைக்கும் புதுமைக்கும் பாலமாகவும், பின்னாளில் எழுந்த நாடகங்களுக்கு இவரது நாடகங்கள் முன்னோடியாகவும் விளங்கியதை காண இயல்கிறது.

**துணைநின்ற நூல்கள்**

1. இராமச்சந்திரகவிராயர், இரங்கபாஷியகார நாய்க்கர் மற்றும் நரசுநாய்க்கர் பதிப்பு, பாரதி

அச்சுக்கூடம், சகுந்தலை விலாசம், 1845.

2. இராமச்சந்திரகவிராயர், அமரம்பேடு இரங்கசாமி முதலியார் பதிப்பு, ஸ்ரீ மகாபாரதவிலாசம், சூது : துகிலுரிதல், 1884.
3. பாரதியார், பாரதியார் கவிதைகள், திருமகள் நிலையம், 2019.
4. மயிலை சீனி. வேங்கடசாமி, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், பரிசில் வெளியீடு, 2012.
5. முனைவர் திருமதி. ச. சிதம்பரம், விலாச இலக்கியம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2006.